2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

செப்டம்பர் மாத இதழ்

# உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

யோவான் 16:20



# YOUR SORROW WILL TURN INTO Joy.

John 16:20


Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,



| HMSM | XXVII | SEP |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 லட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் 15 வகை ஊழியங்கள்

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

## இந்த மாத வாக்குத்தத்தம்

# உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

யோவான் 16:20

### ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

மீண்டும் இந்த செய்திமலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக நானும் என் சபைமக்களும் ஜெபிக்கிறோம்.

இந்த ஒன்பதாவது மாதத்தில் தேவன் உங்கள் துக்கத்தை, வருத்தத்தை நீக்குவது மட்டுமல்லாமல் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் தருவார். உலகம் கொடுக்கிற சந்தோஷம் நிரந்தரமல்ல; உலகம் கொடுக்கிற பிரகாரமாகவும் அல்ல. நித்திய மகிழ்ச்சி உங்கள் தலை மேல் இருக்கும், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

எனக்காகவும் குடும்பத்திற்காகவும் சபைக்காகவும் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

Rev. Dr. J. Samuel Jebaraj

ஆண்கள் பகுதி

# வாழ்க்கையில் நேர்மை ஏன் அவசியம்?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். இம்மாத இதழில் நேர்மையாய் வாழ்வதின் அவசியத்தை குறித்துக் காண்போம்.

நல்ல உக்கிராணக்காரன் உண்மையாய் வாழ்வது அவசியம் (1கொரி 4:2) என்று வேதத்தில் நாம் காண்கிறோம். நேர்மையான வாழ்க்கை என்பது ஒவ்வோரு நாளும் நமக்கு முன்பாக உள்ள ஒரு சவாலாக உள்ளது. கடைக்காரர் கூடுதலான சில்லரை கொடுக்கும்போது, ஒருவருடைய பர்ஸ் கீழே விழுவதைக் காணும் போது நேர்மையாக செயல்படுகிறீர்களா?

நமது தேவன் நேர்மையில் பிரியப்படுகிறவர். பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம் (நீதி 12:22; நீதி 11:20). நீங்கள் களவு செய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள் (லேவி 19:11, எபே 4:25). உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் (1பேதுரு 1:15).

நேர்மையாக வாழ நாம் கொடுத்த வாக்கில் உண்மையாக இருக்க வேண்டும். நேர்மையானவைகளையே சிந்திக்க வேண்டும். ஆவியானவருக்கு உங்களை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். எப்பொழுதும் நேர்மையானவர்களோடு சேரவேண்டும். ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் (1கொரி 15:33) என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம். லூக்கா 16:10ல் கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாக இருக்கிறான். கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாக இருக்கிறான், எனவே சிறிய விஷயங்களிலும் நேர்மையாக வாழப் பழகவேண்டும்.

நேர்மையானவர்களை கர்த்தர் பாதுகாக்கிறார்; வழிநடத்துகிறார்; உயர்த்துகிறார்; சமாதானம் அளிக்கிறார்; பொருளாதார ஆசீர்வாதம் தருகிறார். நேர்மை தவறுகிறவர்களையோ கர்த்தர் அருவருக்கிறார். நீதி 3:32ல் "மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன்" என்றிருக்கிறது.

எரேமியா 5:1 ல் "நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டு பிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களிலே திரிந்து பார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்" என்ற வசனத்தின்படி உங்கள் நேர்மை உங்கள் சமுதாயத்தின் தலையெழுத்தையே மாற்றும் வல்லமை உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக...

## புருஷர் ஐக்கிய கூட்டம்

திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 -8.45 மணி வரை

இணைந்து ஜெபிக்க யாவரையும்
அன்புடன் அழைக்கிறோம்..

# உங்கள் நம்பிக்கை

பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். கர்த்தர் மேல், அவருடைய வார்த்தையின் மேல் வாக்குத்தத்தங்களின் மேல் நீங்கள் வைத்திருக்கிற நம்பிக்கை வீண் போகாது. அது நிச்சயமாய் நிறைவேறும். கர்த்தர் மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். இன்று உங்கள் நம்பிக்கை யார் மேல்?

எதன் மேல்?

**1) மனுஷன்**:

மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருப்பதே நலம். ஏன்? இன்று முளைத்து நாளை அடுப்பில் போடப்படுகிற புல்லுக்கு மனுஷன் ஒப்பாயிருக்கிறான். மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏன்? மனுஷன் பொய் சொல்லுவான், மனம் மாறுவான், ஏமாற்றுவான், கைவிடுவான். பெண்களே! கர்த்தரை நம்புங்கள். கைவிடமாட்டார். நீங்கள் ஆசிர்வதிக்கப்படுவீர்கள்.

**2)ஐசுவரியம்**:

ஐசுவரியம் நிலையற்றது. இன்று உங்கள் கையில், அது நாளை யார் கையிலோ? 1 தீமோ 6:17ல் "நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும் நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும்" என கட்டளையிடுகிறார். பெண்களே! ஐசுவரியத்தை கர்த்தர் தருவார். ஆனால், அதன் மேல் நம்பிக்கை வைக்காதிருங்கள். அது தனக்கு இறக்கைகளை உண்டு பண்ணிக்கொண்டு ஆகாய மார்க்கமாய் பறந்து போய்க்கொண்டே இருக்கும். கர்த்தருடைய காரியங்களில் கவனக் குறைவைக் கொண்டு வரும். ஜாக்கிரதையாயிருந்து விழிந்திருங்கள்.

**3) சுய புத்தி**:

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். நீங்கள் உங்களை ஞானியென்று எண்ணி, நான் தான் எல்லாம் சரியாய் செய்வேன், பேசுவேன் என்று எண்ணி தீமையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடிக் காப்பார். கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடவுங்கள். உங்கள் நம்பிக்கை கர்த்தர் மேல் மாத்திரம் இருக்கட்டும். பாக்கியவதிகளாய் இருப்பீர்கள்.



பெண்கள் ஆராதனை
செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.
LIVE STREAMING




# அகல ஆழ உயரமாய்

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
**உதவி**: Bro. பிலிப்

உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துக் கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் 'எவ்வாறு இருக்கக் கூடாது' என குமாரின் வாழ்க்கை வழி பார்த்தோம். இம்மாதம், ஏன் அப்படி இருக்க கூடாது, எதற்காக இவ்வாறு தான் வாழ வேண்டும் என்று பார்ப்போம்.

காரணம் என்னவாக இருக்கும்? நம் நன்மைக்காக? பரலோகத்திற்காக? ஆசீர்வாதத்திற்காக? இது எல்லாவற்றிலும் மேலான ஒரு காரணம் உண்டு. தேவன் நம் மீது வைத்துள்ள அளவிட முடியாத அந்த அன்பிற்காக. அதனாலேயே பாடுகிறோம்– "அகல ஆழ உயரமாய் எவ்வளவன்பு கூர்ந்தார், என்ன துன்பங்கள் வந்தாலும் அவர் என்னை கைவிடமாட்டார்."

தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய முகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்.– எபேசியர் 2:4,5

வாலிப நாட்களின் போராட்டம் அத்தனை எளிது இல்லை. முன்னிருந்த நாட்களை விட இப்பொழுது நாம் வாழும் காலம், மிக இலகுவாக நம்மை ஒரு சறுக்குப்பாதையில் தள்ளிவிடும். எங்கு பார்த்தாலும் இச்சை, கோபம், வெறுப்பு, இனவெறி, வறட்டு கவுரவம், ஊர்ப்பெருமை, தற்பெருமை, வாழ்க்கையை enjoy பண்ணனும் என்று zombie மாதிரி வாலிபர்களை பிசாசு திண்டாட விடுகிறான். இதில் ஒன்றிலாவது நாமும் அகப்பட்டுக்கொண்டு அந்த பழைய மனிதனை மேற்கொள்ள போராடிக்கொண்டு வருகிறோம்.

ஆனால் இவை எல்லாவற்றின் நடுவிலும், ஒருவர் நம்மை கைவிடாமல் நம் பக்கம் நிற்கிறார். வேதத்தில் பழைய ஏற்பாட்டை வாசிக்கும் போது, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை விட்டு விலகுவதும் திரும்ப வருவதும் பார்க்கும்போது, நமக்கே சலிப்பு தட்டும். 'நான் எல்லாம் இவ்வளவு மோசமாக இருக்க மாட்டேன் பா' என்று தோன்றும். இப்போது நம் வாழ்க்கையை திரும்பி பார்த்தால், நாமும் அதே இஸ்ரவேல் ஜனங்களை போல் தான் இருந்துள்ளோம் என்று விளங்கும். ஆனாலும் தேவ கோபமோ ஒரு நிமிஷம் மாத்திரம், தயவோ நீடிய வாழ்வு.

தேவசாயலுக்கு மாற்றாமல், அவர் அன்பு நம்மை விடாது. இத்தனை உண்மையாக நம்மை நேசிக்கும் தேவனின் அன்பிற்கு ஈடாகத்தான், நாம் அவரின் வழிகளில் வாழ வேண்டும். நாம் இவ்வுலகத்திற்கு உரியவர்கள் அல்ல, உலக ஆசிர்வாதம் மேன்மை நம் நோக்கமும் அல்ல. நமக்கு தேவையான சிறப்பான சுதந்திரம் எல்லாம் ஏற்ற நேரத்தில் அவர் வாய்க்க செய்வார். பெற்றோர் அன்பின் ஆழத்தை, தியாகத்தை உணரும் தருணம் இனி என் அப்பா, அம்மாவிற்காக நான் எதுவும் செய்வேன் என்று ஒரு உத்வேகம் வாலிபர்களுக்கு வருவதுண்டு. அதிலும் மேலான தேவனின் அன்பிற்கு நாம் என்ன செய்ய போகிறோம்?



YOUTH FESTIVAL 2025
09.30AM TO 04.00 PM
HOLY MOUNTAIN A.G CHURCH
SEPTEMBER 13 SATURDAY



# குற்றமில்லை என நிரூபித்தல்

பொறுப்பு: Mrs. லீலிதனராஜ்

**அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும்
இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**



தானியேலின் குடும்பத்தினர் ஒரு சின்ன பட்டணத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாடகைக்கு இருக்கும் வீட்டின் பக்கத்தில் வீட்டின் சொந்தகாரரும் இருந்தார்கள். சிறுபிள்ளைகள் சத்தம் போட்டால் கொஞ்சம் கூட சகித்துக்கொள்ளமாட்டார்கள். தானியேல் நல்ல குணமுடைய சிறுவன்.அந்த வீட்டிற்கு வாடகைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. ஒரு நாளும் அவன் பூக்களை பறித்ததே இல்லை. ஒருநாள், பூச்செடியில் உள்ள பூங்கோத்தை யாரோ பறித்து கேட் அருகில் போட்டுவிட்டார்கள். பூக்களை பறித்தது யார் என்று யாரும் கவனிக்கவில்லை. வீட்டுச்சொந்தக்காரர் தானியேல் தான் பறித்திருப்பான் என்று எண்ணி அவனை அதிகமாகத் திட்டினார்கள். எனக்கு தெரியாது என்று அவன் கூறினாலும் அவனை நம்பவே இல்லை. தானியேலின் பாட்டி அவனிடம் ஜெபம் செய்தால் தேவன் யார் செய்தார்கள் என்று நமக்கு நிரூபிப்பார். அவர்கள் பறிக்கும் போது வீட்டின் சொந்தகாரர் பார்க்க வேண்டும், என்று உறுதியாய் ஜெபித்தார்கள்.

ஒரிரு நாட்களுக்குப் பிறகு, வீட்டின் சொந்தகாரரும் தானியேலின் அப்பாவும் வீட்டின் வராண்டாவில் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டின் சொந்தகாரர் பார்த்து கொண்டிருக்கும் போது ஒரு குரங்கு பூங்கொத்துகளை பறித்து கேட் அருகில் போட்டு விட்டு சென்றது. தானியேலின் அப்பா “குரங்கு தான் பூங்கொத்துகளை பறித்து கேட் அருகில் போடுகிறதா?” என்றார். வீட்டின் சொந்தகாரர் ஒரு வார்த்தையும் பேசாமல் அமைதியாக இருந்தார்.



அன்பான சிறுபிள்ளைகளே! நாம் ஆராதிக்கிற தேவன் நீதியுள்ளவர். தானியேல் குற்றமற்றவன் என் நிரூபித்துக்காட்டினார். நாமும், நம் மேல் வரும் தவறான குற்றங்களுக்காக ஜெபித்தால், நம்மையும் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பார்.

## மனப்பாடவசனம்: நீதி 24:28

**நியாயமின்றி பிறருக்கு விரோதமாய்ச் சாட்சியாக ஏற்படாதே.
உன் உதடுகளினால் வஞ்சகம் பேசாதே.**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

CHILDREN'S TIME
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக
ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.

**மாதம் தேவை: ரூ.1,96,100**

**பொறுப்பு: Bro. அர்னால்டு**



**Pr. Daniel Babu**
*Gujarath*



**Pr. Stephen Rathod**
*Rajasthan*



**Pr. Mandeep kidhay**
*Moga*



**Pr. Chaman Masih**
*Ablowal*



**Pr. Binu Vijayan**
*Tripuri*



**Pr. SawarGill**
*Gurdaspur*



**Pr. Peter Masig**
*Taran Taram*



**Pr. Sandeep Singh**
*Chunnai Kalan*



**Pr. Inderjit Singh**
*Mohali*



**Pr. Prasenjit Basumatary**
*Assam*



**Pr. Karthick**
*Chandigarh*



**Pr. Gurdial Singh**
*Dehriwal Droga*



**Pr. Rajkumar**
*Kurali*



**Pr. Rajesh**
*Mahatpur*



**Pr. Simson**
*Karnataka*



**Pr. Happy Masih**
*Sarspur*



**Pr. Jirma Lal**
*Bazara*



**Pr. Caleb**
*Delhi*



**Pr. Heral Kaddara**
*Rajasthan*



**Pr. Arionp Kumar**
*Ajimar*



**Bro.Sam Guna Seelan**
*Sharing Love Mission*



**Pr. Kamal Deep**
*Punjab*



**Pr. Godson Joy**
*Punjab*



**Pr. Harjeet Kaur**
*Nawashar*



**Pr. Jaswinder Kumar**
*Delhi*



**Pr. Pritam Singh**
*Rajasthan*



**Pr. Sonu**
*Makhu*



**Pr. Patras Masih**
*Feruyzepur*



**Pr.Dhananjay Nokman**
*Assam*



**Pr. Jinod Rabha**
*Assam*



**Bro. Prakash**
*Shalom Charity Trust*



**Sis. Sugantha**
*Shalom Charity Trust*



**Bro. Joshua Bhuriya**
*Shalom Charity Trust*



**Sis. Karuna K. Damor**
*Madhya Pradhesh*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

*எங்களது வங்கி கணக்கு எண்:*

**Name** : Assembly of God Pudukottai
**Bank** : TMB
**A/c No.** : 035100140450007
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 11 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 16 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலைக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள *QR Code* ஐ *Scan* செய்யவும்.**

# சாட்சிகள்

● தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். நான் பல ஆண்டுகளாக லோன் மூலம் வீடு வாங்க போராடிக் கொண்டிருந்தோம். லோன் வாங்க முடியவில்லை. பாஸ்டர் , 7 வது மாதம் சிறப்பான மாதம்; ஆசிர்வாதமான மாதம் என்று கூறினார்கள். நாங்கள் குடும்பமாக விசுவாசித்து ஜெபித்தோம். தேவன் அந்த (7 வது) மாதமே லோன் இல்லாமல் சொந்த வீடு வாங்க கிருபை செய்தார். ஸ்தோத்திரம்.

– Bro. எடிசன், மகாநகர்

---

● கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக, எனது அத்தை மகள் பெயர் கீர்த்தி அவள் இரண்டு வருடங்களாக Law படிப்பதற்கு விண்ணப்பம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அவளுக்கு கிடைக்கவில்லை.கடந்த வாரம் நமது சபைக்கு ஞாயிறு ஆராதனைக்கு வந்து ஜெப குறிப்பு பெட்டியில் எழுதி போட்டாள். அதே வாரம் வெள்ளிக்கிழமை அவளுக்கு law college ல் படிக்க admission கிடைத்தது. முதன்முதலாக சபைக்கு வந்து ஜெபகுறிப்பு எழுதிபோட்ட அந்தவாரம் முடிவதற்குள் அற்புதம் செய்த கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

–Sis. அபிநயா, இந்திராநகர்

---

● கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம், நான் pregnant ஆக இருக்கும் போது 5வது மாதம் ஸ்கேனில் குழந்தையின் ஒரு கிட்னி சுருங்கி இருக்கிறது என்று டாக்டர் சொன்னார்கள். நாங்கள் பாஸ்டரிடம் சொன்னோம், எங்களுக்காக ஜெபித்தார்கள். எட்டாவது மாத ஸ்கேனில் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை என்று வந்தது. குழந்தை பிறந்து 4 மாதம் கழித்து டாக்டர் ஸ்கேன் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்போதும் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. எல்லா உறுப்புகளும் சரியாக வேலை செய்கிறது என்றார்கள்.தேவனுக்கு கோடான கோடி நன்றி.

–Sis. தீபா, புதுக்கோட்டை

---

● தேவனுக்கு ஸ்தோத்திரம், என் பொண்ணுக்கு திடீர் என்று கை, கால், தலை எல்லாம் தடிப்புதடிப்பாக வீங்கி விட்டது. எது கடித்தது என்று தெரியவில்லை. உடனே ஜெப எண்ணெய் போட்டு ஜெபித்தேன். பாஸ்டர் ஐயாவிடம் சொல்லி ஜெபித்தோம். தேவ கிருபையால் பரிபூரண விடுதலை கிடைத்தது. ஜெபித்த பாஸ்டர் ஐயாவுக்கு நன்றி. அற்புதம் செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றிகள்.

–Sis. மாரிக்கனி, இராமநாச்சியார்புரம்


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349 விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.





அமாவாசை ஜெபம்

22 செப்டம்பர் திங்கள்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்:
கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்:
இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...
பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

## செப்டம்பர் –2025

ஸுக்கா எழுதின சுவிஷேசம் அதிகாரம் 13 முதல் 24 வரை

(வசன இருப்பிடம் எழுதவும்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | |
| | | 2 | 3 | | | |
| | 4 | 5 | | | | |
| 6 | | | | | | |
| | | | 7 | 8 | | 9 |
| | 10 | | | | | 11 |
| | | | | | 12 | |

**வலமிருந்து இடம்**

01) இயேசு அவனை நோக்கி, இன்றைக்கு இந்த வீட்டுக்கு எது வந்தது என்றார்?

02) ஐசுவரியவான், ஆபிரகாமிடம் தனக்கு எத்தனை சகோதரர் இருப்பதாக கூறினான்?

07) ஆயக்காரனுக்குத் தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்தது யார்?

12) தேவனே, பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றது யார்?

**இடமிருந்து வலம்**

03) யார் பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள்?

05) பிணம் எங்கேயோ அங்கே எவைகள் வந்து கூடும்?

06) ஜெப ஆலயத்தில் எத்தனை வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியை கொண்ட ஸ்திரீ இருந்தாள்?

10) எங்கே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றது?

**மேலிருந்து கீழ்**

01) இயேசுவை, யாரை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம் என்றார்கள்?

04) சகேயு தன் ஆஸ்திகளில் எவ்வளவு ஏழைகளுக்கும் கொடுக்கிறேன் என்றான்?

06) அந்த தேசத்துக் குடியானவன் இளைய மகனை எவைகளை மேய்க்கும்படி அனுப்பினான்?

11) இயேசு, பிரதான ஆசாரியனுடைய, வேலைக்காரனின் எதைத் தொட்டு சொஸ்தப்படுத்தினார்?

**கீழிருந்து மேல்**

06) குஷ்டரோகமுள்ள எத்தனை பேர், இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்?

08) தேவனுடைய ராஜ்யத்தை எந்த விதைக்கு ஒப்பாயிருக்கிறது என்றார்?

09) பரிசேயரில் தலைவனுடைய வீட்டில் எந்த வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான்?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

பரிசு பெறும் 5 நபர்கள்:

1) Sis.M. முத்துசெல்வி, முடிவை
2) Sis. K. மரியரஞ்சிதம், புதுக்கோட்டை
3) Sis. அன்னாள், காமராஜ்நகர்
4) Sis. A.S. தங்கபாய், சாயர்புரம்
5) Sis. P. அருள்செல்வி, புதுக்கோட்டை

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

**Name : J. Samuel Jebaraj**
**Bank : ICICI - Bank**
**A/c No. : 613901506045**
**IFC Code : ICIC 0006139**
**Branch : Tuticorin**

*UPI ID:*

**prjsjebaraj@okaxis**

## *இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:*

05.09.2025 – வெள்ளிக்கிழமை
**போதகர்கள் பிள்ளைகளுக்கான முகாம் - விருதுநகர்**

09.09.2025 – செவ்வாய்க்கிழமை
**போதகர்கள் ஐக்கிய கூடுகை - திருநெல்வேலி**

11,12.09.2025 – வியாழன், வெள்ளி
**போதகர்கள் மாநாடு -டெல்லி**

14.09.2025 – ஞாயிற்றுக்கிழமை
**ஆண்கள் முகாம் - பழையகாயல்**

16.09.2025 – செவ்வாய்க்கிழமை
**முழு இரவு ஜெபம் - தூத்துக்குடி**

17.09.2025 –புதன்கிழமை
**போதகர்கள் ஐக்கிய கூடுகை - திருச்சி**

19.09.2025 – வெள்ளிக்கிழமை
**கன்வென்ஷன்-கோவை**

22.09.2025 – திங்கட்கிழமை
**அமாவாசை ஜெபம் - பிரையர் பார்க்**

23.09.2025 – செவ்வாய்க்கிழமை
**போதகர்கள் உபவாச கூடுகை - திருநெல்வேலி**

24,25.09.2025–புதன், வியாழன்
**போதகர்கள் கருத்தரங்கு- அரியலூர்**

26.09.2025 – வெள்ளிக்கிழமை
**கன்வென்ஷன் - முதலூர்**

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 – வது ஆராதனை - காலை 06:00–07:30

2 – வது ஆராதனை - காலை 08:30–10:00

3 – வது ஆராதனை - காலை 11:00–12:30

4 – வது ஆராதனை - மாலை 05:00–06:00 ஹிந்தி

5 – வது ஆராதனை - மாலை 06.30–08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 – 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 – 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 – 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 – 12:30

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**





எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் – 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in

holymountainag@gmail.com

+91 98421 71014, +91 6369097825

+91 93457 12349


ABOUT US

SCAN ME

To ..............................................................................

..............................................................................

..............................................................................